R 5501

# கொள்கைஅடிப்படையிலான கிறிஸ்தவ சுயாதீனம்

## CHRISTIAN LIBERTY BASED ON PRINCIPLE

சகோதரர்களாக சந்திக்கும் நம்முடைய அங்கீகாரம் ஆண்டவருடைய வார்த்தையாயிருக்கிறது என்பதை, நாம் ஒருபோதும் மறக்கக்கூடாது : "இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறீர்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்"(மத்18:20). இது கர்த்தருடைய ஜனங்களாக சந்திப்பதற்கான நம் சாசன உரிமையாக இருப்பதால், அவருடைய நாமத்தில் எந்த இடத்திலும், எந்த நேரத்திலும் சந்திக்க தேர்ந்தெடுத்தாலும், இதன்கீழ் தேவனுடைய ஜனங்கள் அனைவருக்கும் சமமான உரிமை உள்ளதை நாம் ஒப்புக்கொண்டாக வேண்டும். இக்கொள்கையை, வேதாகமத்தில் கொடுக்கப்பட்ட எடுத்துக்காட்டின்படி நாம் நினைவில் கொள்ளவேண்டும் : ஒரு தருணத்தில், பிரசங்கப் பிரயாணத்தை முடித்துவிட்டு 12 சீஷர்களும் திரும்பியிருந்தபோது, பரிசுத்த யோவான் இயேசுவிடம், "ஐயரே, ஒருவன் உம்முடைய நாமத்தினாலே பிசாசுகளை துரத்துகிறதை நாங்கள் கண்டு, அவன் எங்களுடனேகூட உம்மைப் பின்பற்றாதபடியால் அவனைத் தடுத்தோம் என்றான். அதற்கு இயேசு: தடுக்கவேண்டாம்; நமக்கு விரோதியாயிராதவன் நமது பட்சத்திலிருக்கிறான் என்றார்" (லூக்9:49,50). யோவானால் தடைசெய்யப்பட்ட அந்த நபர், சிலரிடத்தில் நன்கு தொடர்புகொண்டு, நாங்கள் சந்திக்காத நபர்களிடத்தில் தற்போது கூடுகையை ஏற்படுத்தியிருக்கிறார் என்றதற்கு, இயேசு என்னகூறினார் ? "அவனைத் தடுக்க வேண்டாம்; என் நாமத்தினாலே அற்புதஞ்செய்கிறவன் எளிதாய் என்னைக் குறித்துத் தீங்கு சொல்லமாட்டான்" என்றார் – மாற்கு 9:38–40.

இதுபோன்ற விஷயங்களில் அவருடைய சித்தத்தைக்குறித்து, இன்றைய நாளில் ஜீவிக்கும் தேவனுடைய பிள்ளைகளுக்கு அறிவுறுத்த உதவும் வழிகாட்டியாக ஒரு பொதுவான கொள்கை இங்கு கொடுக்கப்பட்டுள்ளது. நம் ஏற்பாடுகள் கர்த்தருக்கு மிகவும் பிரியமாயிருக்கிறது என நிச்சயமாக நாம் நம்பலாம், இல்லையெனில், அவற்றை நாம் அவ்விதமாக அடைந்திருக்கமாட்டோம். மற்றவர்கள் வேறுபாடாக சிந்திப்பார்களானால், அந்த பொறுப்புணர்வு அவர்களிடத்திலும் கர்த்தரிடத்திலும் இருக்கிறது. அவர்களைத் தடைசெய்வது நமக்குரியதல்ல, மாறாக கர்த்தருடைய பணிநிர்வாகத்தில், அவருடைய ஞானத்தின்படி அவர்களை ஆசீர்வதிப்பதோ அல்லது ஆசீர்வதிக்காதிருப்பதோ அவருக்குரியது.

இக்கருத்தின்படி செயல்படுவது, கர்த்தருடைய ஜனங்களது கூடுகைகளை சிறுசிறு வகுப்புக்களாக உடைக்காதா என்று சிலர் கேட்கலாம் ? இது சகோதரர்களையே சாந்திருக்கவேண்டும் என்று நாம் பதிலளிக்கிறோம். இருவராகவோ அல்லது மூவராகவோ அல்லது அதிக எண்ணிக்கையிலேயோ கூடுவதற்கு அவர்கள் உரிமை பெற்றிருக்கிறார்கள். பெரிய அளவிலான குழுக்களோடு ஐக்கியப்படுவது அவர்களுக்கு அனுகூலமளிக்குமென்று அவர்கள் கண்டார்களானால், அவ்வாறு செய்வதில் அவர்கள் மகிழ்ச்சியடைவார்கள் என்பதில் சந்தேகமில்லை. நேரடியாகவும், அவருடைய அப்போஸ்தலர்கள் மூலமாகவும், இயேசுவின் போதனையின் ஆவி மற்றும் வார்த்தையின் வழிகளுக்குட்பட்டு, சபையில் மாபெரும் சுயாதீனத்தை இயக்குவதை இது பொருள்படுத்துகிறது.

ஒரு வகுப்பாக சகோதரர்கள் கலந்துகொள்ளும்போது, அவர்களின் தனிப்பட்ட சுயாதீனங்கள் மற்றும் சிலாக்கியங்கள் சிலவற்றை விட்டுவிடவும், அல்லது வெற்றிடமாக்கவும் வேண்டும் என்பதை புரிந்துகொள்ளவேண்டும். தனிப்பட்ட நபர்களுடைய விருப்பங்கள் ஏறக்குறைய சபையினுடைய விருப்பத்திற்கு உட்பட்டதாயிருக்கவேண்டும். பெரும்பான்மையானோர் சிறுபான்மையோரின் விருப்பங்களை கருத்தில் கொள்ளவேண்டும். கூடுமானவரை அனைவரையும் கலந்துகொள்ளச்செய்யவும், பிரியப்படுத்தவும், கூடுகைகளினுடைய தன்மை, கூடுகைகளுக்கான இடம், மற்றும் பேச்சாளர்கள் முதலியனவற்றை மிதமான வகையில் ஏற்பாடு செய்யப்படவேண்டும். ஒருவரும் தன் சொந்த சுயநல விருப்பங்களையும், நலன்களையும் மட்டுமே கருத்தில் கொள்ளலாகாது. கூட்டுறவின்ஆவி, பொன்னான பிரமாணமாகிய அன்பின்ஆவியே மேலோங்கியிருக்கவேண்டும். இது உண்மையாயிருப்பதனால், எஜமானின் ஆவியால் நிரப்பப்பட்டு, அவரிடத்தில் நெருக்கமாய் ஜீவிப்போர் அனைவரும் முழு சபையின் நலன்களுக்காக, தனிப்பட்ட விருப்பங்களை வழங்குவதில் ஒருவரோடொருவர் ஐக்கியப்படுவார்கள் .

## மனசாட்சி மதிக்கப்படவேண்டும்

பெரும்பான்மையோரின் விருப்பத்திற்கு இணங்காத விஷயங்கள் மட்டுமே மனசாட்சியின் விஷயங்களாகும். மற்ற சகோதரர்கள் அனைவரும் சரி என்று எண்ணினாலும், பாவம், அநீதி, தவறு என்று ஒருவன் நம்புகிறவைகளை அவன் செய்வதில்லை. சபையில் மற்ற சகோதரர்களால் வழிநடத்தப்பட்டாலும், ஒருவரது மனசாட்சி என்ன கட்டளையிடுகிறதோ அதை செய்யாமல் யாரும் விடுவதில்லை.

மனசாட்சி எப்பொழுதும் மதிக்கப்படவேண்டும். ஒருபோதும்அதை மீறப்படவோ அல்லது நெரிக்கப்படவோ கூடாது. மற்ற சகோதரர்களுடைய மனசாட்சிகளின் கண்ணோட்டம் அந்த விஷயத்தில் வேறுபட்டிருந்தாலும், தன் மனசாட்சிக்கு உண்மையாய் நிலைநிற்கிற எந்த ஒருவரையும் அவர்கள் அவமதிப்புக்குள்ளாக்கக்கூடாது. அதற்கு மாறாக, அவனுடைய மெய்ம்மையில் பற்றுறுதிகொண்டு தைரியமாய் நிற்பவனை மதிக்கத்தக்கவராக எண்ண வேண்டும்.

கிறிஸ்துவின் சரீரத்தில் இந்த கொள்கைகளின் அடிப்படையில் சுயாதீனம் தொடர்ந்து பராமரிக்கப்படலாம். ஒரே சிந்தையுடையவர்கள் ஒருவரோடொருவர் ஐக்கியப்படுவதன் விகிதாச்சாரத்திற்கேற்ப, நாம் ஆசீர்வாதத்தைக் கண்டடையலாம். ஐக்கியம் காக்கப்படாதபோது, கூடுகையானது தெய்வீக ஏற்பாட்டுக்கு இணக்கமில்லாமலும், அல்லது விரும்பத்தகாததாகவும் இருக்கும். ஆனால் வெவ்வேறு வகுப்புகளில் கூடுவது அநுகூலமளிக்குமென்று சகோதரர்கள் கண்டால், நாம்நம்புகிறபடியும் வழக்கமாக காண்கிறபடியும் முதலில் தனிப்பட்ட சுயாதீனத்தின் கட்டுப்பாடு என்பது மிகப் பெரியதாக செயல்படுத்தப்பட்டதோடுகூட, சிறுபான்மையினராக உள்ள சகோதரர்களின் உணர்வுகளை பெரும்பான்மையினர் அலட்சியப்படுத்தினதையும் கண்டோம்.

ஆனால் ஒரே பட்டணத்தில் கர்த்தருடைய ஜனங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட கூடுகைகள் அவசியம் என்றோ, அல்லது விரும்பத்தக்கது என்றோ கண்டால், அவர்கள் அபிஷேகம் பண்ணப்பட்ட தலையின் கீழாக ஒரே சகோதரத்துவமாயிருந்து, ஒரே இருதயத்தையும், ஒரே சிந்தையையும் பெற்றிருக்கவேண்டியது இன்னும் நிச்சயமான உண்மையாயுள்ளது. அவர்கள், ஒருவர் மற்றவருடைய நலன்களை கவனித்து, அன்புசெய்வதற்கும் நற்கிரியைகளுக்கும் ஒருவரையொருவர் ஏவப்படும்படிக்கு, தங்கள் எல்லா வல்லமையையும் பிரயோகிக்கவேண்டும்.

———————